பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

10 07 2026 FRIDAY 7 15 PM ஆகாஷவாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நியூஸிலாந்து உடனான நல்லுறவை வலுப்படுத்துவதில், இந்திய வம்சாவளியினரும் முக்கியப் பங்கு வகிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. சாகர்மாலா நிதிக் கழகத்தின் சார்பில் 10 ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. பீகார் மற்றும் மத்தியப்பிரதேசத்தில் தலா ஒரு சட்டப்பேரவை தொகுதியில் நடைபெறவுள்ள இடைத்தேர்தலுக்கான வேட்பாளர்களை பிஜேபி அறிவித்துள்ளது.

4. நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட வெனிசுலாவில், இந்தியா சார்பில் மேற்கொள்ளப்பட்ட மீட்பு பணிகள் நிறைவடைந்துள்ளன.

5. உலக கோப்பை வில்வித்தை போட்டியில், இந்தியாவின் கீர்த்தி மற்றும் Prithika Pradeep அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>><<<<<<

நியூஸிலாந்து உடனான நல்லுறவை வலுப்படுத்துவதில், இந்திய வம்சாவளியினரும் முக்கியப் பங்கு வகிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அரசுமுறைப் பயணமாக நியூஸிலாந்து சென்றுள்ள அவர், ஆக்லாந்தில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில் பங்கேற்ற பின்னர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் இதனை தெரிவித்துள்ளார்.

இந்திய வம்சாவளியினர் சார்பில் நடைபெற்ற இந்த வரவேற்பு நிகழ்ச்சியில், தமிழகம் மற்றும் பஞ்சாப் மக்களின் சார்பில் நடைபெற்ற நடனம் மற்றும் இசை நிகழ்ச்சிகள் நமது பண்பாட்டு பாரம்பரியத்தை எடுத்துரைக்கும் வகையில் அமைந்ததாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

கர்நாடக மற்றும் இந்துஸ்தானி சேர்ந்திசையும், வந்தேமாதரம் பாடலும் இந்த நிகழ்ச்சியில் இடம்பெற்றதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

நாட்டின் கடல்சார் வளர்ச்சியில் சாகர்மாலா நிதிக் கழகம் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார்.

இந்த நிதிக் கழகத்தின் செயல்பாடுகள் குறித்து, அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்ட பின்னர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இந்த நிதிக் கழகத்தின் மூலம் இதுவரை 10 ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இதில் இதுவரை 3 ஆயிரத்து 700 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத் தொடருக்கான முன்னேற்பாடுகள் குறித்து மத்திய இணையமைச்சர்கள் திரு. அர்ஜூன்ராம் மெஹ்வால், டாக்டர் எல். முருகன் ஆகியோர் இன்று விரிவாக ஆய்வு மேற்கொண்டனர்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள திரு. அர்ஜூன்ராம் மெஹ்வால், இந்த கூட்டத்தொடர் வரும் 20ஆம் தேதி தொடங்கி அடுத்த மாதம் 13ஆம் தேதிவரை நடைபெறவுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த கூட்டத்தொடர் குறித்த பல்வேறு ஆலோசனைகளும் இந்த ஆய்வின் போது வழங்கப்பட்டுள்ளதாக திரு. அர்ஸூன்ராம் மெஹ்வால் கூறினார்.

>>>>>><<<<<<

தில்லியில் பசுமை பரப்பை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் பாராட்டுதலுக்குரியது என்று மத்திய இணையமைச்சர் திரு. பிரதாப்ராவ் ஜாதவ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, தில்லி முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தாவுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், சுற்றுச் சூழலை பாதுகாப்பதற்கும், நீடித்த வளர்ச்சியை உறுதி செய்வதற்கும் தில்லி அரசின் இந்த நடவடிக்கை உதவிடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மரக்கன்றுகள் நடும் இயக்கத்தின் கீழ், மூலிகைத் தாவரங்களை நடுவதற்கும் கூடுதல் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றும் திரு. பிரதாப்ராவ் ஜாதவ் அந்த கடித்தத்தில் வலியுறுத்தியுள்ளார்.

>>>>>><<<<<<

மழை நீர் சேமிப்பு இயக்கத்திற்கு மக்கள் ஆதரவு அதிகரித்து வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பான மன்கிபாத் நிகழ்ச்சியில் இதுதொடர்பாக விடுத்த வேண்டுகோளை ஏற்று, நாடுமுழுவதும் நீர்நிலைகளை புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதன் ஒரு பகுதியாக சத்திஷ்கடில் Balod மாவட்டத்தில் 2 லட்சத்து 85 ஆயிரம் நீர்நிலைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிராம பஞ்சாயத்து அமைப்புகளும் மாவட்ட நிர்வாகமும், சமூக ஆர்வலர்களும் இப்பணியில் ஆர்வத்துடன் ஈடுபட்டதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

கடலோர காவல்படை சார்பில் ஒருநாள் மாநாடு இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

கடலோர காவல்படையின் தலைமையகத்தில் நடைபெற்ற இந்த மாநாட்டில், இந்தப் படையின் வளர்ச்சிக்கான திட்டங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

கடல்சார் பாதுகாப்பில் எதிர்கொண்டுள்ள சவால்கள் குறித்தும் இதில் ஆலோசிக்கப்பட்டதாக கடலோர காவல்படையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>>><<<<<<

மக்களவைக்கும் சட்டப்பேரவைகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது, மிகப் பெரிய சீர்திருத்த நடவடிக்கையாக இருக்கும் என்று இதுகுறித்த ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட நாடாளுமன்ற கூட்டுக்குழு உறுப்பினர் திரு. அனுராக் தாக்கூர் கூறியுள்ளார்.

இன்று பனாஜியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர். இதுதொடர்பாக விரிவாக ஆலோசனைகள் நடத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

அரசு நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கும், முதலீடுகளை கூடுதலாக ஈர்ப்பதற்கும், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும் இது உதவிடும் என்று திரு. அனுராக் தாக்கூர் கூறினார்.

>>>>>><<<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் மாணவர்கள் முக்கியப் பங்கு வகிப்பதாக இஸ்ரோ தலைவர் திரு. நாராயணன் கூறியுள்ளார்.

பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

இங்கு பயின்று பட்டம் பெற்ற மாணவர்கள் நாட்டின் வளர்ச்சிக்காக பங்களிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

மாணவர்கள் வாழ்நாள் முழுவதும் ஏதாவது ஒன்றை கற்றுக் கொள்ள வேண்டும் என்றும் திரு. நாராயணன் வலியுறுத்தினார்.

>>>>>><<<<<<

பிஜேபி தலைமையிலான மத்திய அரசு கடந்த 12 ஆண்டுகளில் சுகாதாரத் துறையின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளது.

உலகின் மிகப் பெரிய சுகாதார காப்பீட்டுத் திட்டமாக ஆயுஷ்மான் பாரத் காப்பீட்டுத் திட்டம் திகழ்கிறது என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த திட்டத்தின் கீழ் இதுவரை 40 கோடிக்கும் மேற்பட்ட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் பயனாளிகளுக்கு வருடத்திற்கு 5 லட்சம் ரூபாய் மதிப்பிலான சிகிச்சை இலவசமாக வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில் இந்த திட்டத்திற்காக 9 ஆயிரத்து 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

பீகார் மாநிலம், Bankipur சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கான பிஜேபி வேட்பாளராக திரு. நீரஜ்குமார் சின்ஹா அறிவிக்கப்பட்டுள்ளார்.

இதேபோல், மத்தியப்பிரதேசத்தின் Datia சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் திரு. Ashutosh Tiwari போட்டியிடுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தொகுதிகளில் வாக்குப்பதிவு வரும் 30ஆம் தேதி நடைபெறும். வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் 3ஆம் தேதி மேற்கொள்ளப்படும்.

>>>>>><<<<<<

பீகாரில் மாதந்தோறும் 10ஆம் தேதி ஓய்வூதிய தினமாக கடைபிடிக்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. சாம்ராட் சௌத்ரி கூறியுள்ளார்.

பட்னாவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், சமூக பாதுகாப்பு ஓய்வூதிய திட்டத்தின் கீழ் இன்று, ஆயிரத்து 423 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதன்மூலம் 97 லட்சத்திற்கும் மேற்பட்ட ஓய்வூதியதாரர்கள் பயனடைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த திட்டத்தின் கீழ் எந்தவொரு பயனாளியும் விடுபடக்கூடாது என்பதை கருத்தில் கொண்டு சிறப்பு முகாம்கள் நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த முகாம்களில் புதிய பயனாளிகள் சேர்க்கப்படுவார்கள் என்றும் திரு. சாம்ராட் சௌத்ரி கூறினார்.

>>>>>><<<<<<

அஸ்ஸாம் அரசின் வரும் நிதியாண்டிற்கான நிதி நிலை அறிக்கை அம்மாநில சட்டப்பேரவையில் இன்று தாக்கல் செய்யப்பட்டது.

நிதியமைச்சர் திரு. Jayanta Malla Baruah இதனை தாக்கல் செய்து பேசினார்.

முதலீட்டுச் செலவினங்கள் 38 ஆயிரத்து 152 கோடியே 65 லட்சம் ரூபாயாக இருக்கும் என்று கூறிய அவர், வருவாய் பற்றாக்குறை 3 சதவீதமாக இருக்கும் என்று தெரிவித்தார்.

சாலை மேம்பாட்டுப் பணிகளுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் திரு. Jayanta Malla Baruah கூறினார்.

>>>>>><<<<<<

கேரளத்தின் வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவு குறித்து விரிவான விசாரணை மேற்கொள்ளப்படும் என்று அம்மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. P.K. Basheer கூறியுள்ளார்.

நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட பகுதியை இன்று பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

இதற்கு காரணமானவர்கள் யாராக இருந்தாலும், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு. P.K. Basheer தெரிவித்தார்.

>>>>>><<<<<<

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட வெனிசுலாவில், இந்தியா சார்பில் மேற்கொள்ளப்பட்ட மீட்பு பணிகள் நிறைவடைந்துள்ளன

*இதற்கான Operation Amistad நடவடிக்கையின் கீழ் வெனிசுலா சென்ற இந்திய படையினர், இன்று புதுதில்லி திரும்பியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*>>>>>><<<<<<*

*உலக கோப்பை வில்வித்தை போட்டியில், இந்தியாவின் கீர்த்தி மற்றும் Prithika Pradeep அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.*

*ஸ்பெயினின் மேட்ரிட்டில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் கீர்த்தி, 6-2 என்ற புள்ளிக்கணக்கில் ஸ்பெயினின் Elia Canales-வை வென்றார்.*

*மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் Prithika Pradeep 140-135 என்ற புள்ளிக்கணக்கில் ஸ்பெயினின் Andrea Munoz-ஐ வென்றார்.*

*>>>>>><<<<<<*

*பிரான்ஸின் La Plagne-ல் நடைபெற்ற சர்வதேச செஸ் போட்டியில் இந்தியாவின் இனியன் பட்டம் வென்றார்.*

*ஒன்பது சுற்று முடிவில் ஏழரை புள்ளிகளுடன் அவர் இப்பட்டத்தை கைப்பற்றினார்.*

*>>>>>><<<<<<*

*சர்வதேச இணைய செஸ் போட்டியில், இந்தியாவின் Arjun Erigaisi பட்டம் வென்றார்.*

*>>>>>>END<<<<<<*